Literacy for a Billion

Movie: Kandhakottai
Year: 2009

Song: Kadhal Pambu Unnai
Lyricist: Yugabharathi

காதல் பாம்பு உன்னை
கொத்தி விட்டதே
உன் நாடி நரம்பெல்லாம்
செத்து விட்டதே
காதல் பாம்பு உன்னை
கொத்தி விட்டதே
உன் நாடி நரம்பெல்லாம்
செத்து விட்டதே
நான் சொல்ல சொல்ல
துள்ளுகிறாய் என்னடி
நீ தேவை இல்லை
தூரம் தள்ளி செல்லடி
அய்யோ அய்யோ
அய்யய்யய்ய்யோ
இந்த காதல் நரகமடி
இந்த காதல் நரகமடி
காதல் பாம்பு என்னை
கொத்தவில்லையே
என் நாடி நரம்பெல்லாம்
சாகவில்லையே
இதயத்தின் அன்பெல்லாம்
பரிமாறிக் கொண்டாலே
உலகத்தின் அழகெல்லாம்
உனக்குள்ளே குடியேறும்
விலகாமல் எப்போதும்
துணையாக வந்தாலே
நிமிஷங்கள் ஒவ்வொன்றும்
வாழ்க்கையின் பரிசாகும்
காதத்தால்
இத்தனையும் கிட்டுமே
என் கைபிடித்தால்
தொந்திரவு நிற்குமே
ஏய்
காதத்தால்
நீ மனிதன் ஆவாய்

கண்ணுக்கழகாய்
எல்லாம் பெறுவாய்
உன்னை நீயே
உணர்ந்து கொள்வாய்
எல்லோருக்கும்
அன்பை தருவாய்
எதையும் தாங்கும்
இதயம் பெறுவாய்
குட்டிச்சுவரை
கோட்டையாக்குவாய்

ஆஹாஹஹா
ஓஹோஹோஹோ
காதல் பாம்பு உன்னை
கொத்தி விட்டதே
உன் நாடி நரம்பெல்லாம்
செத்து விட்டதே

காதல் விழாதே
கை தூக்க ஆளில்லை
தாய் தந்தை அன்பைப்போல்
வேறொன்றும் ஈடில்லை
காலத்தை வீணாக்கும்
காதலை நம்பாதே
கடைசியில் உயிர் வாங்கும்
பின்னாடி செல்லாதே
காதத்தால்
நீர்வடிக்கும் கண்களே
பெண் கண்ணடித்தால்
அத்தனையும் சிக்கலே
காதல்தான்
நீ பைத்தியமாவாய்
கண்களிருந்தும்
குருடாய் போவாய்
தூக்கம் கெட்டு

உடலும் போவாய்
ஏக்கத்தாலே
தினமும் சாவாய்
எண்ணி எண்ணி
இளைத்து போவாய்
எல்லோரையும்
பகைத்துக் கொள்வாய்

அய்யோ அய்யய்யோ
அச்சோ அச்சச்சோ
காதல் பாம்பு என்னை
கொத்தவில்லையே
என் நாடி நரம்பெல்லாம்
சாகவில்லையே

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.